செய்தி வெளியீடு எண்.484 நாள்.27.6.2008

# பத்திரிக்கை வெளியீடு

தமிழ் நாட்டில் உப்பு எளிதில் கிடைக்காமை அல்லது பற்றாக்குறை பற்றிய அறிக்கை மற்றும் கருத்து, ஒரு பகுதியைச் சேர்ந்த பத்திரிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது. சில விபரங்கள் தவறானதாக இடம் பெறுவதால் பொதுத்துறை நிறுவனமான தமிழ் நாடு உப்பு நிறுவனத்தின் செயல்பாடுகள் பற்றி பொது மக்களுக்குத் தவறான கருத்து சென்றடைகின்றது. இதன் காரணமாக இந்நிறுவனம், உப்பு உற்பத்தியில் எடுத்துள்ள முயற்சிகள் மற்றும் நிலைமையைப் பற்றி விளக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

## தமிழ் நாட்டில் உப்பு உற்பத்தி

தமிழ் நாட்டில் சாதாரணமாக ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ 18 முதல் 22 இலட்சம் டன்கள் உப்பு உற்பத்தி செய்வதில் குளோர்–அல்கலி தொழிற்சாலைகள் உபயோகத்திற்கு அதிகபட்சமாகவும் அதில் 4–ல் ஒரு பங்கு கல் உப்பு மற்றும் சுத்திகரிக்கப்பட்ட அயோடைஸ்டு உப்பாகவும் மாநிலத்தில் உபயோகப்படுத்தப்படுகிறது. இதில் தமிழ் நாடு உப்பு நிறுவனத்தின் உற்பத்தியின் அளவு 7 விழுக்காடு அளவு ஆகும். இதை 40 விழுக்காடாக உயர்த்தத் திட்டமிடப்பட்டது.

## பருவம் தவறி பெய்த மழையினால் உப்பு உற்பத்தி இந்த வருடம் பாதிப்படைந்துள்ளது.

இந்த வருடம் பிப்ரவரி, மார்ச் மாதத்தில் பருவம் தவறிப் பெய்த மழையினால் உப்பு உற்பத்திச் செயல்பாடுகளில் அதிக அளவு தடங்கல் ஏற்பட்டு உப்பு விளைச்சலுக்காக தயார்படுத்தப்பட்டிருந்த உப்புப் பாத்திகள் சேதமடைந்துவிட்டது. மழைக்குப் பிறகு மறுபடியும் தடைப்பட்ட உப்பு உற்பத்தி செயல்பாடுகள் தொடங்கப்பட்டது. இதனால், 40 விழுக்காடு உப்பு உற்பத்தி இழப்பு ஏற்பட்டு தொழிற்சாலைகளுக்கும், நுகர்வோர்களுக்கும், சில்லறை வியாபாரிகளுக்கும் வழங்கக்கூடிய உப்புக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தமிழ் நாடு உப்பு நிறுவனம், பருவம் தவறி பெய்த மழைக்கு முன்பாகவே அதிகப் பரப்பளவில் உப்பு உற்பத்தி செய்வதற்காக சிறப்பான முயற்சிகளை

மேற்கொண்டது. இருந்தபோதிலும், அதிக உற்பத்திக்காக திட்டமிடப்பட்ட முயற்சிகள் அனைத்தும், பெய்த மழையினால் தடைப்படுத்தப்பட்டு 40 விழுக்காடு இழப்பு ஏற்பட்டது.

**உப்பு வழங்குவதை அதிகப்படுத்த நிறுவனத்தின் நடவடிக்கைகள்**

இந்த நிலைமையைத் தொடர்ந்து நுகர்வோர்களுக்கு ஏற்படக்கூடிய உப்புத் தட்டுப்பாட்டைத் தவிர்க்க இந்நிறுவனம் உப்பு வழங்குவதற்கு முக்கியத்துவம் கொடுத்து இருப்பு உள்ள உப்பைத் தொழிற்சாலைகளுக்கு மட்டும் அளவோடு வழங்க ஒரு கொள்கை முடிவை எடுத்துள்ளது. இந்நிறுவனம், பொது விநியோகத் திட்டத்தின் மூலம் அயோடின் கலந்த உப்பு மற்றும் சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த உப்பை சூப்பர் மார்க்கெட் மற்றும் மளிகைக் கடை விலையை விடக் குறைந்த விலையில் கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களுக்குக் கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய நடவடிக்கையை மேற்கொண்டும் சந்தை விற்பனையில் 10 விழுக்காடு மட்டுமே விற்பனை செய்ய முடிகிறது. மேலும் தரமான உப்பினை மலிவு விலையில் விற்பதால், அதிக விற்பனைத் தாக்கம் சந்தையில் குறைவாக உள்ளது.

**தமிழ் நாடு உப்பு நிறுவனம் வழங்கும் மலிவான விலையில் தரமான உப்பு**

1998–ஆம் ஆண்டு அதாவது 10 ஆண்டுகளுக்கு முன்பு, அயோடின் கலந்த அரசு உப்பு கிலோ ரூ.2.50–க்கு என்று நிர்ணயிக்கப்பட்டது. தற்பொழுது மேலும் இழப்பைத் தடுக்க 2008–ம் ஆண்டு மே மாதம் முதலாக கிலோ ரூ.3/– ஆக நிர்ணயித்துள்ளது. மேலும் இந்நிறுவனம் சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த உதிரி உப்பை வாங்கி கிலோ ரூ.4/– (2004) என்ற முந்தைய விலையிலிருந்து கிலோ ரூ.5/– என்று பொது விநியோகத் திட்டத்தின் மூலம் விற்பனை செய்கிறது. இந்நிறுவனம் தனியாக இரும்பு மற்றும் அயோடின் கலந்த இருவித செறிவூட்டப்பட்ட உப்பை தயாரித்து கிலோ ரூ.8/–க்கு பொது விநியோகத் திட்டத்தின் மூலம் வழங்கப்படவுள்ளது. இவ்விதமாக உப்பு, சந்தையில் முதன்மையாக கருதப்படாவிட்டாலும் மற்ற நிறுவனங்களின் உப்பை விட மிகக் குறைந்த விலையில் குறைந்த இலாபத்தில் விற்பனை செய்யப்படுகிறது. இந்நிறுவனம் விற்பனை செய்து வரும் தரமான உப்பினைக் குறித்து மக்கள் பயன்படும் வகையில் உள்ளது என இந்திய தர நிறுவனம் (ISI) மற்றும் பன்னாட்டு நிறுவனமான ICCIDD மற்றும் உப்புத் துறை

ஆணையர் அவர்கள் உரிய சான்றிதழ் வழங்கியுள்ளனர். இந்நிறுவனம் இந்த ஆண்டு ISO 9001:2000 சான்றிதழ் பெற்று மக்களுக்கு தரமான உப்பினை வழங்க உரிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் நாடு உப்பு நிறுவனத்தின் மேற்கண்ட விலைகளுக்கு எதிராக சந்தையில் பெரும்பாலான உப்புக்கள் முறையாக அயோடின் சத்துக் கலக்கப்படாமல் இருமடங்கு அதிகபட்ச விலையாக கல் உப்பு கிலோ ஒன்றுக்கு ரூ.6/– மற்றும் சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த உதிரி உப்பினை ரூ.10/–க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட தரமான இருவித செறிவூட்டப்பட்ட உப்பு (இரும்பு மற்றும் அயோடின்) போல் இந்தியாவில் எந்த தனியார் நிறுவனமும் தயாரித்து வழங்கவில்லை. நுகர்வோர்கள் உணவுப் பொருள் வழங்கல் அட்டை இல்லாமலேயே சென்னையிலுள்ள அமுதம், காமதேனு கடைகளில் மற்றும் மாவட்டங்களிலும் எல்லாவிதமான உப்புக்களும் எந்தவிதக் தட்டுப்பாடுமின்றி பெறுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

**தமிழ் நாடு உப்பு நிறுவனம் ஏழை உப்புத் தொழிலாளர்களுக்கும் நுகர்வோர்களுக்கும் சேவை செய்கிறது.**

தமிழ் நாடு உப்பு நிறுவனம், ஒரு சிறந்த மாதிரி முன்னோடி தொழில் நிறுவனமாகத் திகழ்வதால் தமிழ் நாட்டிலுள்ள மிகவும் பின்தங்கிய பகுதியிலுள்ள உப்புத் தொழிலாளர்களும், நுகர்வோர்களும் இந்நிறுவனத்தின் செயல்பாடுகளைப் பாராட்டுகின்றனர். மேலும், இந்நிறுவனம் கூட்டுறவுச் சங்கங்களை ஊக்கப்படுத்தி உப்புத் தொழிலாளர்களின் வாழ்வினை வளமாக்க கூட்டுறவுத் துறை மூலம் உப்பினைப் பெற்று நல்ல விலையில் சில குறிப்பிட்ட மாவட்டங்களுக்கு மக்கள் பயன்படும் வகையில் சிறப்பாக வழங்கி வருகிறது. மேற்கூறிய பணியின் மூலம் இந்நிறுவனம் உப்புத் தொழிலாளர்களுக்கும், நுகர்வோர்களுக்கும் இடையே நல்ல உறவினைத் தொடர்ந்து பேணிக்காத்து வருகிறது.